பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

21 12 2024 7 15

சனிக்கிழமை இரவு

தலைப்புச் செய்திகள்

1. குவைத் சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று மாலை கல்ப் ஸ்பிக் முகாமில் இந்திய தொழிலாளர்களை சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடினார்.
2. வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்து வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.
3. அரசு திட்டங்களின் மூலம் வழங்கப்படும் உணவுகளின் மூலப்பொருட்களுக்கு சரக்கு மற்றும் சேவை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுவதாக மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அறிவித்துள்ளார்.
4. உச்சநீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி திரு மதன் லோகூர், ஐ நா சர்வதேச நீதிக் கவுன்சிலின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
5. வெஸ்டர்ன் இந்தியா ஸ்லாம் ஸ்குவாஷ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் **Akanksha salunkhe** இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

*----- இனி விரிவான செய்திகள் ---*

**[]<<<>>>[]**

குவைத் சென்றடைந்த பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று மாலை கல்ப் ஸ்பிக் முகாமில் தங்கியுள்ள இந்திய தொழிலாளர்களை சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடினார்.

அவர்களுடன் அமர்ந்து பிரதமர் சிற்றுண்டி அருந்தினார்.

இன்று நடைபெறும் அரேபிய வளைகுடா கோப்பை கால்பந்து போட்டி தொடக்க விழாவிலும் சிறப்பு விருந்தினராக பிரதமர் பங்கேற்கிறார்.

முன்னதாக இரண்டு நாள் பயணமாக குவைத் சென்றடைந்த பிரதமருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

விமான நிலையத்தில் பிரதமரை அந்நாட்டு துணை பிரதமர் திரு **Sheikh Fahad Yousef Saud Al-Sabah** வரவேற்றார்.

அங்கு வசிக்கும் ஏராளமான இந்திய வம்சாவளியினரும் விமான நிலையத்தில் திரண்டு பிரதமரை உற்சாகமாக வரவேற்றனர்.

இதையடுத்து ராமாயணம் மற்றும் மகாபாரதத்தை அரபிக் மொழியில் மொழி பெயர்த்த அப்துல்லா பரோன் மற்றும் வெளியீட்டாளர் அப்துல் லத்தீப் அல் நெசப் ஆகியோரை குவைத் விமான நிலையத்தில் பிரதமர் சந்தித்து பேசினார்.

அந்நாட்டில் வசிக்கும் 101 வயதாகும் முன்னாள் இந்திய வெளியுறவு அதிகாரி மங்கல் **sain handa** -வையும் திரு நரேந்திரமோடி சந்தித்தார்.

தமது பயணத்தையொட்டி பிரதமர் வெளியிட்டுள்ள செய்தியில், இந்தியா – குவைத் இடையேயான உறவு வரலாற்று ரீதியிலானது என்றும், பல தலைமுறைகளாக இது தொடர்ந்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அந்நாட்டு அமீர் மற்றும் பட்டத்து இளவரசரை சந்திப்பதை தாம் ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாகக் கூறியுள்ளார்.

குவைத்தில் உள்ள இந்திய சமூகத்தினரை சந்திப்பதையும் மிகுந்த ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

குவைத்வாழ் இந்தியர்கள் இருதரப்பு நட்புறவை வலுப்படுத்துவதில் பெரும் பங்களிப்பு அளித்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தமது பயணம் இந்தியா – குவைத் மக்களிடையேயான நட்புறவை மேலும் வலுப்படுத்தும் என்றும் திரு நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கடந்த 43 ஆண்டுகளில் இந்திய பிரதமர் ஒருவர் குவைத் செல்வது இதுவே முதல் முறையாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

திரு நரேந்திரமோடிக்கு நாளை குவைத்தில் உள்ள பயான் அரண்மனையில் பாரம்பரிய அணிவகுப்பு மரியாதையுடன் கூடிய வரவேற்பு அளிக்கப்படுகிறது.

**[]<<<>>>[]**

வடகிழக்கு பிராந்தியத்தின் வளர்ச்சிக்கு பிரதமர் திரு நரேந்திரமோடி மிகுந்த முக்கியத்தும் அளித்து வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

அகர்தலாவில் வடகிழக்கு குழுமத்தின் 72-வது கூட்டத்திற்கு தலைமை வகித்து அவர் பேசினார்.

வடகிழக்கு மாநிலங்களில் முதலீடு செய்ய வரும் தொழில்துறையினரை மத்திய அரசு ஊக்குவித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இம்மாநிலங்கள் மீது உலக நாடுகள் கவனம் செலுத்தும் அளவிற்கு அவை வளர்ச்சியடைந்து வருவதாக திரு அமித்ஷா தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் பேசிய மத்திய வடகிழக்கு பிராந்திய மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா, இம்மாநிலங்களில் தற்போது தீவிரவாதம் மற்றும் வன்முறை சம்பவங்கள் பெருமளவு குறைந்திருப்பதாகக் கூறினார்.

**[]<<<>>>[]**

உயிரி தார் கலவை மூலம் அமைக்கப்பட்ட நாட்டின் முதலாவது சாலையை மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூரில் மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின் கடகரி இன்று மக்கள் பயன்பாட்டுக்கு திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், தலைநகர் தில்லியில் ஏற்படும் காற்று மாசுபாடு பிரச்சினைக்கு தீர்வு காணு ம் விதமாக வைகோலிலிருந்து இயற்கை எரிவாயு தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

இது தவிர பல்வேறு உயிரி கழிவிகளிலிருந்தும் எரிவாயு தயாரிக்கப்படுவதன் மூலம் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறைவதுடன், பெட்ரோலுக்காக செலவிடப்படும் தொகையும் மிச்சமாகும் என்று அவர் கூறினார். விவசாயிகளும் இதன்மூலம் பயனடைவார்கள் என்றும் திரு நிதின் கட்கரி தெரிவித்தார்.

[]<<<>>>[]

அரசு திட்டங்களின் மூலம் வழங்கப்படும் உணவுகளின் மூலப்பொருட்களுக்கு சரக்கு மற்றும் சேவை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுவதாக மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சால்மரில் இன்று நடைபெற்ற ஜி எஸ் டி கவுன்சில் கூட்டத்திற்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மிளகு, உலர் திராட்சை போன்றவற்றை விவசாயிகளே விற்பனை செய்தால்

ஜி எஸ் டி வரி கிடையாது என்றும அவர் அறிவித்தார். செறிவூட்டப்பட்ட அரிசி மீதான ஜி எஸ் டி வரி ஐந்து சதவீதமாக குறைக்கப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

ஜீன் தெரபி கிசிக்சைக்கு ஜி எஸ் டி-யிலிருந்து விலக்கு அளிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும் மருத்துவக் காப்பீடு தொடர்பாக இன்றைய கூட்டத்தில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.

[]<<<>>>[]

காசாநோய் ஒழிப்புக்கான 100 நாள் இயக்கத்தை முனைப்புடன் செயல்படுத்துவது குறித்து மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா இன்று அனைத்து மாநில முதலமைச்சர்கள் மற்றும் சுகாதாரத்துறை அமைச்சர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

காணொலி வாயிலாக நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய அவர், 100 நாள் இயக்கத்தின் முன்னேற்றத்தை கண்காணிக்க ஒத்துழைப்பு அளிக்குமாறு மாநில முதலமைச்சர்களை கேட்டுக் கொண்டார்.

காசநோய் இல்லாத இந்தியாவை உருவாக்க மக்களை ஒன்று திரட்டி பணியாற்றுவதை உறுதி செய்யுமாறு சட்டப்பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்களையும் திரு ஜெ பி நட்டா வலியுறுத்தினார்.

[]<<<>>>[]

உச்சநீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி திரு மதன் லோகூர் ஐ நா சர்வதேச நீதிக் கவுன்சிலின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் 2028-ஆம் ஆண்டு நவம்பர் 12-ஆம் தேதி வரை நான்கு ஆண்டு காலத்திற்கு இந்த பதவியை வகிப்பார்.

புதிய பொறுப்பை ஏற்க உள்ள நீதிபதி திரு மதன் லோகூருக்கு ஐ நா பொதுச்செயலாளர் திரு ஆண்டனியோ குட்டாரஸ் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

குஜராத் மாநிலம் கச் பகுதியில் ரான் உத்சவ் எனப்படும் வருடாந்திர பாலைவன திருவிழா களைகட்டியுள்ளது. கடந்த மாதம் தொடங்கிய இந்த திருவிழா அடுத்த ஆண்டு மார்ச் 15-ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இது குறித்து பிரதமர் திரு நரேந்திரமோடி வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் இந்த திருவிழாவில் மக்கள் பெருமளவில் பங்கேற்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.,

இந்த பாலைவனத் திருவிழாவில் இடம்பெறும் வண்ணமிகு கலாச்சார நிகழ்ச்சிகள் சுற்றுலா பயணிகளுக்கு பெரும் உற்சாகத்தை ஏற்படுத்துவதுடன், அப்பகுதியின் வெண்மணல் பரப்பை காணும் அரிய வாய்ப்பு கிடைக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

[]<<<>>>[]

தூத்துக்குடி வ உ சிதம்பரனார் துறைமுகத்தில் பொது சரக்குகளை கூடுதலாக கையாளும் வகையில் 80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பத்தாவது சரக்கு தளம் அமைக்கப்பட உள்ளதாக துறைமுக ஆணைய தலைவர் திரு சுசாந்த் குமார் புரோஹித் தெரிவித்துள்ளார். தூத்துக்குடியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 306 மீட்டர் நீளம் மற்றும் 14 புள்ளி இரண்டு மீட்டர் ஆழம் கொண்ட பெரிய கப்பல்களை கையாள ஏதுவாக மூன்றாவது சரக்கு தளத்தை ஆழப்படுத்தும் பணிகள் வரும் பிப்ரவரி மாதம் முடிவடையும் என்று கூறினார். தூத்துக்குடி துறைமுகத்தில் நடப்பு ஆண்டில் 29 புள்ளி ஏழு மில்லியன் டன் சரக்கு கையாளப்பட்டிருப்பதாகவும், இது முந்தைய ஆண்டின் இதே காலகட்டத்தைவிட ஒன்று புள்ளி எட்டு ஏழு சதவீதம் அதிகம் என்றும் அவர் தெரிவித்தார்.

[]<<<>>>[]

நேபாளத்தின் சுதூர் பஸ்சிம் மாகாணத்தில் உள்ள பஜூரா பகுதியில் இன்று நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் ஐந்து புள்ளி இரண்டாக பதிவானது. இந்த நிலநடுக்கம் காரணமாக வீடுகளில் விரிசல் ஏற்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

[]<<<>>>[]

உக்ரைன் படைகள் நடத்திய ட்ரோன் தாக்குதலையடுத்து, ரஷ்யா-வில் உள்ள கசான் மற்றும் சரட்டோவ் விமான நிலையங்களிலிருந்து விமானங்கள் புறப்படுவதற்கும், இறங்குவதற்கும் ரஷ்ய விமான போக்குவரத்து முகமை தற்காலிக தடை விதித்துள்ளது.

இதனிடையே ரஷ்யா நேற்று நடத்திய ட்ரோன் தாக்குதலில் உக்ரைனில் உள்ள புற்றுநோய் மருத்துவமனை குடியிருப்புகள் பெரும் சேதமடைந்துள்ளதாக உக்ரைன் அதிபர் திரு ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

வெஸ்டர்ன் இந்தியா ஸ்லாம் ஸ்குவாஷ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் **Akanksha salunkhe** இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

மும்பையில் இன்று நடைபெற்ற அரை இறுதி ஆட்டத்தில் அவர், எகிப்து நாட்டின் **Jana swaify** -யை வென்றார்.

இன்று நடைபெறவுள்ள மற்றொரு அரை இறுதி ஆட்டத்தில் **Anahat singh** - எகிப்தின் **Nour khafagy**-யை எதிர்கொள்கிறார்.

**[]<<<>>>[]**

அடுத்த ஆண்டுக்கான ஐ எஸ் எஸ் எப் ஜூனியர் உலகக்கோப்பை துப்பாக்கி சுடும் போட்டி இந்தியாவில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ரைபில், பிஸ்டல் மற்றும் ஷாட்கண் உள்ளிட்ட பிரிவுகளில் போட்டி நடைபெறும் என தேசிய ரைபில் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுபோன்ற சர்வதேச போட்டிகள் நடத்துவதன் மூலம் இந்தியா விளையாட்டுத் துறையில் உலகின் முன்னணி நாடுகளில் ஒன்றாக உருவெடுக்கும் என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

***<u>End of News</u>***